மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 58/2019

பெயர் – ஜெகதீஸ் (வா.சா.1)

நாள் – 07.07.2023

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் என்ன பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை மீட்டு வாங்குவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது சொத்து என சொல்லப்படும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.101/2, 101/3, 102/2 ஆகும். சார் பதிவாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் அவர் தவறுதலாக பதிவு செய்துள்ளதால் சேர்த்துள்ளேன். தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக சார்பதிவாளரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் நபர்கள் அங்கே காலதாமதம் ஆகும் என்று சொன்னதால் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். மேற்படி விதமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கில் 3,4 பிரதிவாதிகள் அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் பத்திரத்தை ரத்து செய்ய கோரியுள்ளேன்.

மறுவிசாரணை – இல்லை.